(அ) மத்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் இந்தக் கல்வி ஆண்டில் (1973-74) நியமிக்கப்படவிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

(இ) இதில் இராமநாதபுரம் கல்வி மாவட்டத்திற்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டன?

(உ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு எவ்வளவு? தனியார் பள்ளிகளுக்கு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சுமார் 10,000.

(இ) உயர்நிலைப் பள்ளிகளுக்கு 25 பதவிகளும், தொடக்கப் பள்ளிகளுக்கு 100 பதவிகளும் ஒதுக்கப்பட்டன.

(உ) உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட 25 பதவிகளும் தனியார் பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டன. தொடக்கப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட 100 பதவிகளில் 5 பதவிகள் நகராட்சிப் பள்ளிகளிலும், 55 பதவிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும், 40 பதவிகள் தனியார் பள்ளிகளிலும பயன்படுத்தப்பட்டன.

Oriental Colleges

* 216 Q.—PULAVAR O. ARIVUDAINAMBI (on behalf of THIRU K. ARIVAZHAGAN AND THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is a proposal to recognise the Oriental Colleges as Grade II Arts Collegts; and

(b) if so, from which academic year?

கீழ்த்திசைக் கல்லூரிகள்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் & தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) கீழ்த்திசைக் கல்லூரிகளை (Oriental Colleges) இரண்டாம் நிலை கலைக் கல்லூரிகளாக அங்கீகரிக்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளதா?

(இ) ஆமெனில், எந்தக் கல்வி ஆண்டிலிருந்து இந்த அங்கீகாரம் அளிக்கப்படும்?

1974 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கீழ்த்திசைக் கல்லூரிகளை, இரண்டாம் நிலை கலைக் கல்லூரிகளாகக் கருதும் பொருள் அரசின் பரிசீலனையில் இல்லை. தவிர, இது பல்கலைக் கழகங்கள் முடிவு செய்ய வேண்டிய ஒரு பொருள்.

Costly Hospital Equipments in Government Hospitals

* 217 Q.—THIRU SAW GANESAN (on beholf of THIRU G. SWAMINATHAN). Will the Hon. the Minister for Health eb pleased to state—

(a) the names of Government Hospitals in the State where the costly hospital equipments such as Electro-Cardiogram, Electro-Encephalogram and X-Ray equipment are under repair as on 1st November 1970;

(b) the period for which they are under repair; and

(c) the alternative arrangements made when the above equipments were under repair?

அரசு மருத்துவமனைகளிலுள்ள விலையுயர்ந்த மருத்துவமனைக் கருவிகள்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—11—1970 அன்றுள்ளபடி, இம்மாநிலத்தில் எந்தெந்த அரசு மருத்துவமனைகளிலுள்ள நெஞ்சுத்துடிப்பைப் பதிவு செய்யும் மின்னியற் (Electro-cardiogram), மூளை வீக்கத்தைப் பதிவு செய்யும் மின்னியற் கருவி (Electro-Encephalogram) எக்ஸ் கதிர்கள் கருவி ஆகிய விலையுயர்ந்த மருத்துவமனைக் கருவிகள் பழுது பார்த்து வரப் படுகின்றன?

(இ) எவ்வளவு காலமாக அவை பழுது பார்த்து வரப்படுகின்றன?

(உ) மேற்சொன்ன கருவிகளைப் பழுது பார்க்கையில், செய்யப்பட்ட மாற்று ஏற்பாடுகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) (இ) & (உ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 76-81 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.